முறையில் தற்போது கூட ஏறத்தாழ 10,000 ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போக்க அரசாங்கம் தண்ணீர் விநியோகத்தை ஒழுங்குபடுத்த ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இந்த பாதகம் ஏற்பட்டிருப்பதற்கு தண்ணீர் விநியோகம் காரணம் அல்ல. பருவ மழை பொய்த்ததுதான் அதற்குக் காரணம். பருவ மழை பொய்த்ததற்கு என்னால் எதுவும் செய்ய முடியாது.

ஐயன்குளம் ஏரியை ஆழப்படுத்தல்

* 729. வினா—புலவர் சி. பழனிச்சாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனிக்கருகில் உள்ள ஆயக்குடியைச் சேர்ந்த ஐயன் குளத்தை ஆழப்படுத்தி வாய்க்கால் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 1.20 இலட்சம். எதிர் பார்க்கப்படும் உணவு உற்பத்தி 87.75 டன்களாகும். ஒரு டன்னுக்கு ஆகும் செலவு ரூ. 1,368. இத்திட்டம் 1974–75-இல் ஒப்புதலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

* 730. வினா—திரு. கி. ஜெயராமன்: மாண்புமிகு உணவு–கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தினை ஊக்குவிக்க (Consumer Co-operative Movement) அரசு தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்திற்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, சிறு சிறப்பங் காடிகள், நுகர்வோர் தொழில்கள் ஆகியவற்றைத் தொடங்குதல், கிடங்குகள் கட்டுதல், பாரவண்டிகள் வாங்குதல், பங்கு மூலதனம், நிர்வாக உதவித்தொகை ஆகியவற்றை வழங்குதல் போன்ற பல்

1974 ஏப்ரல் 3]

வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு அரசு நிதியுதவி அளித்து வருகிறது. ஆதாயம் இல்லாமல் இயங்கிவரும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புத்துயிர் அளிப்பதற்காக சிறப்பு நிதி உதவியும் அளிக்கப்படுகிறது. இன்றியமையாப் பொருட்களைச் சில்லறையில் விநியோகம் செய்யும் பணியை வருங்காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களிடம் படிப்படியாக ஒப்படைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாட்டிற்காக 1—4—69-லிருந்து 31—3—73 வரை வழங்கப்பட்ட நிதியுதவி ரூ. 125.97 லட்சமாகும். இதைத்தவிர மாநில திட்டத்தின் நிதி வரம்பிற்குப் புறம்பாக இந்திய அரசிடமிருந்தும் நிதியுதவி பெறப்படுகிறது. துறைப் பண்டகசாலைகளையும், பெரிய அளவிலான சில்லறைக் கடைகளையும் திறந்து அவற்றை விரிவு படுத்துதல், நுகர்வோர் தொழில்களை ஏற்படுத்தல் ஆகியவை குறித்த மத்திய அரசுத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக மேற்படி நிதியுதவி பெறப்படுகிறது. நிதியுதவி அளிக்கும் வங்கிகள் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காக அவசியமான இடங்களில் மேற்படி வங்கிகளுக்கு அரசு உத்தரவாதமும் அளிக்கப்படுகிறது.

திரு. கி. ஜெயராமன்: தலைவரவர்களே, உறுப்பினர்கள் பங்குத் தொகை குறைந்தபட்சம் எவ்வளவு என்பதையும், சில இடங்களில் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துகின்ற அளவுக்கு பங்குத் தொகையை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: உறுப்பினர்களுடைய பங்குத் தொகையை இப்போது குறைப்பதாக உத்தேசம் இல்லை. இப்போதுள்ள பங்குத்தொகையே இருக்கும். சர்க்காரின் பங்குத்தொகை, சிறப்பங்காடிகள், சிறு சிறப்பங்காடிகள் ஆகியவைகளுக்குள்ள விகிதாசாரங்களிலும்—தொகையில் மாற்றம் இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: சார், பற்றுக்குறைப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு குறைந்த அமைப்பாக கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்துவது மிக நல்லது என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதனுல் கூட்டுறவுத் துறையின் தேவையை உணர்ந்து, குறைந்த

பட்சம் 10,000 ஜனத்தொகை உள்ள இடங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரு திட்டத்தை வகுத்து செயல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கிட்டத்தட்ட அந்த முறையிலேதான் இப்போது நடைபெறுகிறது. 10,000 ஜனத் தொகை, ஒரு லட்சம் ஜனத்தொகை உள்ள இடங்கள் என்ற அளவிலே திட்டங்கள் போடப்பட்டு, விதிமுறைகள் வகுக்கப்பட்டு, முடிந்த இடங்களில் எல்லாம் கூட்டுறவு அமைப்புகளை உருவாக்க சர்க்கார் முயன்று வருகிறது. அதற்கு ஊக்கமளிக்கும் வகையில் ஆங்காங்கே இருக்கின்றவர்கள் உறுப்பினர்களையும் ஷெயர்களையும் சேர்த்து, கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்க முன்வந்தால் சர்க்கார் உதவி செய்ய தயாராக இருக்கிறது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இப்படி நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை இன்றையதினம் அதிகமாக மக்கள் தொகை உள்ள நகரப்புறங்களில்தான் தொடங்குகிறார்கள். கிராமப்புறங் களில் இப்படிப்பட்ட சங்கங்களை அமைக்க வேண்டுமென்று மக்கள் முன்வந்தாலும் அதிகாரிகள் அதற்கு சட்டம் இல்லை என்று சொல்லி மறுத்துவிடுகிறார்கள். உறுப்பினர்களையும் ஷெயர்களையும் சேர்த்துக் கொடுத்தாலும் மறுத்து விடுகிறார்கள். ஆகவே, கிராமப்புறங்களில் இருக்கின்றவர்கள் உறுப்பினர்களையும் சேர்த்து, உரிய பங்குத் தொகையையும் சேர்த்துக் கொடுத்தால், 5,000, 2,000 மக்கள் தொகை உள்ள இடங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக் கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: சிறப்பங்காடிகள் என்பது மக்களுக்கு நியாயமான விலையில் பொருட்களை விநியோகம் செய்கின்ற அமைப்புகளாகும். மக்கள் தொகைக்கு ஏற்ற வகையில் உறுப்பினர்களையும் பங்குத் தொகையையும் சேர்த்து நியாய விலையில் பொருட்களை விநியோகம் செய்ய கூட்டுறவு அமைப்புகளை சர்க்கார் ஏற்படுத்தி வருகிறது. இந்தக் கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தும் போது லாபம் இல்லாவிட்டாலும் நஷ்டம் இல்லாத வகையில், கட்டட வாடகை, இதர செலவினங்களை சரிக் கட்டுகின்ற வகையில் இயங்குவதற்குள்ள வாய்ப்பு இருக்குமானால், மக்கள் ஆர்வத்தோடு முன்வந்தால் அரசாங்கம் நிச்சயமாக பரிசிலனை செய்யும்.